## தொழில் நுட்பக் கல்வித்துறை

அனுப்புநர்

ஆணையர்,
தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்,
கிண்டி, சென்னை–600 025

பெறுநர்

முதல்வர்கள்,
அனைத்து அரசு/அரசு
உதவிபெறும் மற்றும் சுயநிதி
பாலிடெக்னிக் கல்லூரிகள்

**கடிதஎண்.14515/ஐ–1/2024, நாள். 02.09.2024**

ஐயா/அம்மையீர்,

பொருள்; தொழில் நுட்பக்கல்வி – பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகள் – 2024–25–ஆம் கல்வியாண்டின், முதலாமாண்டு (First year) / / பகுதிநேரம் (Parttime) / நேரடி இரண்டாமண்டு (Lateral Entry) பட்டயப் படிப்பு – மாணாக்கர் சேர்க்கை – 2023–2024–ஆம் கல்வியாண்டின் 12–ஆம் வகுப்பு மற்றும் 10–ஆம் வகுப்பு துணை பொதுத்தேர்வு எழுதிய மாணாக்கர்களை சேர்க்கை செய்தல் – கால அவகாசம் நீட்டித்து வழங்கப்பட்டது – தொடர்பாக.

பார்வை: இவ்வலுவலகக் கடித எண்.14515/ஐ–1/2024, நாள். 01.08.2024

.....

தொழில் நுட்பக்கல்வித்துறையின் கீழுள்ள, அனைத்து பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகளில், 2024–2025–ஆம் கல்வியாண்டின், நேரடி இரண்டாமாண்டு பட்டயப் படிப்பிற்கான மாணாக்கர் சேர்க்கைப் பதிவு 06.05.2024 முதல் 30.06.2024 வரையிலும், முதலாமாண்டு மற்றும் பகுதிநேர பட்டயப் படிப்பிற்கான மாணாக்கர் சேர்க்கைப்பதிவு 10.05.2024 முதல் 30.06.2024 வரையிலும், மேற்கொள்ளப்பட்டு, அந்தந்த கல்லூரிகளில் கலந்தாய்வு நடைபெற்று சேர்க்கை பெற்ற மாணாக்கர்களுக்கு 01.07.2024 முதல் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, பார்வையில் காணும் இவ்வலுவலகக் கடிதத்தின்படி, பட்டயப் படிப்பில் மாணவர் சேர்க்கை விகிதத்தினை அதிகரிக்கும் வகையிலும், துணைப் பொதுத்தேர்வு எழுதிய மாணவர்களின் உயர்கல்வி நலன் கருதி பட்டயப்படிப்பில் வாய்ப்பளிக்கும் வகையிலும், 12–ஆம் வகுப்பு மற்றும் 10–ஆம் வகுப்பு துணை பொதுத்தேர்வு எழுதி வெற்றி பெற்றுள்ள மாணாக்கர்களை, நேரடி இரண்டாமாண்டு மற்றும் முதலாமாண்டு/பகுதிநேரப் பட்டயப் படிப்பில் சேர்க்கை செய்யும் பொருட்டு, மாணாக்கர் சேர்க்கைக்கான கால அளவினை **14.08.2024 வரை நீட்டித்து, மாணாக்கர் சேர்க்கைக்கு அனுமதி வழங்கப்பட்டது.**

எனினும், மேற்படி சேர்க்கைக்கான அனுமதி வழங்கப்பட்ட இறுதி நாளான 14.08.2024–க்குப் பின்னரும், மாணவர்கள் சேர்க்கை வேண்டி கல்லூரிக்கு

வருகின்றனர் என்பதாலும், பட்டயப் படிப்பில் மாணவர் சேர்க்கை விகிதத்தினை அதிகரிக்கும் வகையிலும், பட்டயப்படிப்பு பயில விரும்பும் அனைத்து மாணாக்கர்களுக்கும் வாய்ப்பளிக்கும் வகையிலும், 05.09.2024 மற்றும் 06.09.2024 ஆகிய இரண்டு நாட்கள், அனைத்து பாலிடெக்னிக் கல்லூரிகளிலும். மாணாக்கர் சேர்க்கைக்கு அனுமதி வழங்கப்படுகிறது. சேர்க்கை விவரங்களை 06.09.2024–க்குள் கட்டாயம் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், மேற்படி சேர்க்கைக்கான கால அவகாசம் குறித்து பொதுமக்கள் மற்றும் பட்டயப்படிப்பு பயில விரும்பும் மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையில், கல்லூரி முதல்வர்கள் நிலையில் 03.09.2024 மற்றும் 04.09.2024 ஆகிய இரண்டு நாட்கள் அறிவிப்பு வெளியிடுமாறும், விளம்பரப்படுத்துமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

2/9/24

தொழில் நுட்பக்கல்வி ஆணையருக்காக

2/9/24